Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 09, 2022

வியாழக்கிழமை ஜூன் 09, 2022 | ஒளி: 08கதிர் 018 | பக்கம்:08 | Free

இலங்கை மின்சார சபையின்

## பொறியியலாளர்கள் வேலைநிறுத்தம்

பாராளுமன்றத்தில் இன்று (09) சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை மின்சக்தி திருத்தச் சட்டமூலம் உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் அறிவித்தது.

இந்த திருத்தத்தின் மூலம், மின்சார கொள்வனவின் போது, விலைமனுக் கோரல் போன்ற போட்டித்தன்மை இல்லாமல் ஆக்கப்பட்டு,

தொடர்ச்சி P2

# 21க்கு முன் பதவி துறக்கிறார் பசில்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வதற்கு முன்னாள் நிதியமைச்சரும் அக்கட்சியின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்றையதினம் (09) முற்பகல் 11 மணிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்துள்ள பசில் எம்.பி, தனது தீர்மானத்தை அறிவிப்பார் என்றும் தெரியவருகிறது.

தனது இராஜினாமா கடிதத்தை இன்று (09) அல்லது நாளை (10) பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியதன் பின்னர் கட்சி நடவடிக்கைகளில் முழுநேரமாக ஈடுபடுவதற்கு பசில் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

பசில் ராஜபக்ஷ, தனது கட்சியின் நெருக்கமான குழுவொன்றுடன் நேற்று முன்தினம் இரவு (07) விசேட கலந்துரையாடலை மேற்கொண்டதுடன், தேசியப் பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அவர்களிடம் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

தொடர்ச்சி P2

## சுயாதீனமாகிய சம்பிக்க இணையவும் மாட்டாராம்

பா.நிரோஸ்



சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க நேற்று (8) சபையில் அறிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகினாலும் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெறப்போவதில்லை எனவும் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கு அரசியல் அறிவும் புரிதலும் இல்லை



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தோல்வியுற்ற தலைவராக இருந்து விலக விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதிக்கு அரசியல் அறிவும் புரிதலும் இல்லை என்று தெரிவித்தார்.

நேற்று (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

"ஐ.எம்.எப்"க்கு பின்னால் சென்றாலும்

## டொலர் கிடைக்காது



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்திற்கு (ஐ.எம்.எப்)பின்னால் செல்வதால் எதுவுமே நடக்கப்போவதில்லை.

தொடர்ச்சி P2

ஐ.எம்.எப் மற்றும் ஐ.நா

## அதிகாரிகளுடன் பிரதமர் கலந்துரையாடல்

நெருக்கடி காலத்தை சமாளிக்கும் விதமாக இடைக்கால கடன்களை பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கைகளை முன்னெடுப்பது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவாவுடனும், உணவு மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக ஐ.நாவின் ஒத்துழைப்பு திட்டங்கள் குறித்து இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டியுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ச்சி P2

மே 9 தாக்குதல் விவகாரம்

## ஜோன்ஸ்டனுக்கு பிடியாணை

### மிலான் எம்பிக்கு பிணை சனத் எம்.பிக்கு விளக்கமறியல்

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, நேற்று (08) பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டார்.

காலிமுகத்திடல் கோட்டா கோகம மற்றும் அலரிமாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த மைனா கோகம ஆகியவற்றில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது கடந்த மே 9ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து,



தொடர்ச்சி P2

மே 9 தாக்குதல் விவகாரம்

## கைதாவதை தடுக்க ஜோன்ஸ்டன் ரிட்

காலிமுகத்திடல் கோட்டா கோகம மற்றும் அலரிமாளிகைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த மைனா கோகம ஆகியவற்றில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, சந்தேகநபராகக் கருதப்படும் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இந்தியாவைத் தவிர எவரும் உதவத் தயாரில்லை

பா.நிரோஸ்

உணவு, மருந்து பொருட்கள், உரம் ஆகியவற்றை கொள்வனவு செய்ய வெளிநாடுகளிடம் இருந்து உதவி கிடைத்தாலும், எரிபொருள், நிலக்கரி ஆகியவற்றை கொள்வனவு செய்ய இந்தியாவை தவிர வேறு எந்த நாடும் இலங்கைக்கு உதவத் தயாராக இல்லை எனத் தெரிவித்துள்ள பிரதமர் ரணில், இந்த நிலைமையில் இலங்கைக்கு கடனுதவி வழங்குவதற்கு இந்தியாவிலும் ஒரு தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருவதாகவும் சபையில் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டை சீரழிந்தது ஏன்?

### ஜனாதிபதியிடம் சஜித் கேள்வி

ஒரே இரவில் ஜனாதிபதி எடுத்த முட்டாள்தனமான முடிவால் முழு நாடுமே சீரழிந்துள்ளது என்றும் உரத்தடை என்ற அவரது முடிவால் இன்று நாடு உணவு நெருக்கடியையும் பெரும் பஞ்சத்தையும் சந்தித்து வருகிறது என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்த முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டை சீரழித்தது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்.

நேற்றைய (08) பாராளுமன்ற அமர்வில் கட்டளை நியதிகள் சட்டம் 27/2 இன் ஊடாக இந்நெருக்கடி தொடர்பாக அரசாங்கத்திடம் பல கேள்விகளை முன்வைத்த போதே மேற்குறிப்பிட்ட கேள்வியையும் அவர் முன்வைத்திருந்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இதுவரை அரிசியில் தன்னிறைவு பெற்ற நம் நாடு, ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் இரசாயன உரங்களை ஒரே இரவில் தடை செய்ய மேற்கொள்ளப்பட்ட முட்டாள்தனமான ஒரு முடிவினால் முற்றாக சரிந்தது.



தொடர்ச்சி P2

## பாராளுமன்றம் உடன் கலைக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியையும் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்கிறார் சுமந்திரன்

பா.நிரோஸ்

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஜனாதிபதியை வைத்துக்கொண்டு நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. ஆகவே அவரை பதவியில் இருந்து விலகச் செய்ய வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார். இதேவேளை தற்போதைய பாராளுமன்றம் அதற்கான முறைமையை மீறியுள்ளது என்றும், இதனால் பாராளுமன்றத்தை கலைப்பதே சிறந்தது என்றும் தெரிவித்திருந்தார்.



தொடர்ச்சி P2

396 தேசிய பாடசாலைகளில்

## தமிழ் மொழி மூலமாக 117 ஆசிரியர் வெற்றிடங்கள்

பா.நிரோஸ்

நாட்டிலுள்ள 396 தேசிய பாடசாலைகளில் 3570 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், மாகாண பாடசாலைகளில் 8 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், இதில் தேசிய பாடசாலைகளில் தமிழ் மொழி மூலமாக 117 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் தெரிவித்தார். இந்நிலையில் 35 வயதுக்கு குறைந்த ஆசிரியர் தொழிலுக்காக விருப்பம் தெரிவித்துள்ள பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரி, 22000 பேரை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.



தொடர்ச்சி P2

## மலையக மக்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது

### எமது சமூகம் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுகின்றது என்கிறார் வடிவேல் சுரேஷ்

பா.நிரோஸ்



பதுளை மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த 16 கலாசார மத்திய நிலையங்களுக்குமான வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது. இது தேசிய அநியாயம் என்பதுடன் மலையக மக்களுக்கு செய்யும் பாரிய துரோகம். அத்துடன் இந்திய அரசாங்கத்தின் நன்கொடைகளை பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் இந்திய வம்சாவளி மக்களை புரக்கணித்து வருகின்றது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் சபையில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# வெளிநாடு செல்ல முயன்ற 91 பேர் கைது

மாரவில பிரதேசத்திலும் மேற்கு கடற்பரப்பிலும் நடத்தப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக வெளிநாடு தப்பிச் செல்ல முயன்ற 91 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மேற்கு கடற்படை கட்டளைப் பிரிவின் குழுவொன்று மாரவில பொலிஸாருடன் இணைந்து நேற்று முன்தினம் (07) காலை மாரவில பகுதியில் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில், கடல்மார்க்கமாக சட்டவிரோதமாக தப்பிச்செல்ல முயன்றவர்கள் என சந்தேகிக்கப்படும் 13 ஆண்கள், ஒரு சிறுவன் மற்றும் ஆட்கடத்தலுடன் தொடர்புடைய நபர் ஒருவர் உட்பட 9 முதல் 58 வயதுக்குட்பட்ட 15 ஆண்கள் அப்பகுதியில் உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த போது கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வான் மற்றும் கார் ஒன்றையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, சிலாபம் கடற்கரையில் நேற்றுமுன்தினம் (07) பிற்பகல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படை கட்டளைப்பிரிவின் குழுவினர் சந்தேகத்துக்கிடமான பல நாள் மீன்பிடி படகொன்றை அவதானித்து சோதனை மேற்கொண்டனர்.

அதில், 58 ஆண்கள், 5 பெண்கள், 6 குழந்தைகள் மற்றும் கடத்தலில் ஈடுபட்ட 6 பேர் என ஒன்று முதல் 62 வயதுக்குட்பட்ட 76 பேர் கைது செய்யப்பட்டதுடன், பல நாள் மீன்பிடி படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாரவிலவில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு மற்றும் மாரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மாரவில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 21க்கு முன் பதவி...

பசில் ராஜபக்ஷவின் இராஜினாமாவை அடுத்து வெற்றிடமாகவுள்ள தேசியப் பட்டியல் எம்.பி பதவிக்கு பலரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பதவிக்கு முன்னணி வர்த்தகரான தம்மிக்க பெரேராவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், சட்டமூலம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், இரட்டை பிரஜாவுரிமையை கொண்டிருக்கும் பசில் ராஜபக்ஷவின் எம்.பி பதவி பறிக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கவோ அல்லது எதிர்காலத் தேர்தலில் போட்டியிடவோ முடியாது என்ற சரத்து இந்தத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு முன்னரே தனது பதவியை இராஜினாமா செய்வது உசிதமானது என பசில் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் 21ஆவது திருத்தம் குறித்து பசில் கலந்துரையாடியிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான அஜித் நிவாட் கப்ரால், தனது தேசியப் பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, பசில் ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொறியியலாளர்கள்...

அதற்கு வெளியே மின் உற்பத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றும் மக்களுக்கு நிவாரண விலையில் மின்சாரத்தை வழங்கும் செயற்திட்டமும் இதனால் பாதிக்கப்படும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூ போட்டர்ஸ் நிறுவனத்துக்கு விலைமனு கோரல் இன்றி மின் நிலைய பங்குகள் வழங்கியுள்ள நிலையில் மன்னார் மற்றும் பூநகரியில் காற்றாலை மின்சாரத் திட்டத்துக்கு அதானி நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் காற்றாலை மின்சார அலகொன்றை வழங்குவதற்கு உள்நாட்டு முதலீட்டாளர்கள் உள்ள நிலையில், வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து மின் அலகொன்றின் அதிக விலையில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. மின்சார கொள்வனவின் போது போட்டிக்கு புறம்பாக நிறுவனங்களுக்கு மின் திட்டங்களை வழங்குவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளதுடன், தமது கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாவிடின் நள்ளிரவு முதல் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்படும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

# டொலர்...

எமக்கு டொலர் கிடைக்கப்போவதுமில்லை. எனவே எமது நட்பு நாடுகளின் உதவியை நாட வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறை காரணமாக அடுத்த மூன்று வாரங்களுக்கு எம்மால் ஒன்றுமே செய்ய முடியாது என பிரதமர் தெரிவித்துள்ளார். இவ்வாறான நெருக்கடி நிலையில் முதலில் மக்களுக்கு உணவு வழங்க வேண்டும், அதேபோல் நாட்டுக்கு டொலர் தேவைப்படுகின்றது, ஆனால் அதனை உடனடியாக பெற்றுக்கொள்ள முடியாது. ஆகவே சீனா, இந்தியா, ஜப்பான் மற்றும் ரஷ்யா ஆகிய எமது நட்பு நாடுகளிடம் இருந்து டொலரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நாடுகள் தவிர்ந்து வேறு எந்தவொரு நாட்டில் இருந்து எமக்கு நிதி உதவிகள் கிடைக்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றாலும் எமக்கு டொலர் கிடைக்கப்போவதில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்திற்கு பின்னால் செல்வதால் எதுவுமே கிடைக்கப்போவதில்லை என உறுதியாக என்னால் கூற முடியும். எனவே நட்பு நாடுகளிடம் மட்டுமே எம்மால் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக விசேட பிரதிநிதிகள் குழுக்களை அந்தந்த நாடுகளுக்கு அனுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜோன்ஸ்டனுக்கு...

ஜோன்ஸ்டன் எம்.பி சந்தேகநபராக பெயரிடப்பட்டிருந்தார்.

இந்த சம்பவங்கள் தொடர்பிலான நீதவான் விசாரணை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (08) எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதிமன்றத்துக்கு வருவதை தவிர்த்தமை மற்றும் குறித்த இடங்களில் தங்கியிருக்க தவறியமை குறித்து சட்டமா அதிபரினால் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்டே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக்க உள்ளிட்ட 13 பேரை பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த உட்பட 4 பேரின் விளக்கமறியலை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

# கைதாவதை...

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய தன்னை சந்தேக நபராக பெயரிட்டுள்ள குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர், தன்னைக் கைது செய்ய தயாராகி வருவதாகவும் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். தன்னைக் கைது செய்வதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தை மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ளார். குறித்த மனுவில், பொலிஸ் மா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் உட்பட சிலர் பிரதிவாதிகளாக பெயரிட்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை, கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் கடந்த 1ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போது, சீ.ஐ.டி சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மைனகோகமவில் போராட்டக்காரர்களை தாக்குவதற்கு மக்களைத் தூண்டும் வகையில் உரை நிகழ்த்தியதாக மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். சாட்சியங்களை ஆராய்ந்ததன் பின்னர், ஜோன்ஸ்டன் எம்.பி, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த கஹந்தகம உட்பட மேலும் மூவரை சீ.ஐ.டியினர் சந்தேகநபர்களாகப் பெயரிட்டுள்ளனர் என்றும் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சீ.ஐ.டி சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆயிஷா ஜினசேன, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மைனா கோ கமவில் போராட்டக்காரர்களை தாக்குவதற்கு மக்களைத் தூண்டும் வகையில் உரை நிகழ்த்தியதாக மன்றின் கவனத்துக்கு கடந்த அமர்வில் கொண்டுவந்திருந்தார்.

# சுயாதீனமாகிய...

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) அமர்வில் கலந்துகொண்டு இந்த அறிவிப்பை விடுத்த அவர், சுயாதீனமாக இயங்குவது தொடர்பிலும், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகுவது தொடர்பிலும் சஜித் பிரேமதாசவிடம் சில தினங்களுக்கு முன்பாக எழுத்து மூலம் தான் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசியல் கூட்டணி என்ற அடிப்படையில், 2020ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி புரிந்துணர்வு அடிப்படையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியில் தான் இணைந்து செயற்பட்டதாகவும், ஆளும் கட்சியை விட எதிர்க்கட்சிக்கு அதிகளவான பொறுப்புக்கள் தற்போதைய சூழ்நிலையில் காணப்படுவதாகவும், அமைச்சுப்பதவி ஒன்றை பெறுவதற்காகவே தான் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகுவதாக சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை எனவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கு சர்வ கட்சிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் இடைக்கால அரசாங்கம் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# பாராளுமன்றம்...

பாராளுமன்றத்தில் நேற்று (8) நடைபெற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உரை மற்றும் குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த பாராளுமன்றம் ஆரம்பிக்கப்படும் போது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசாங்கம் அமைக்கப்பட்டது. அதன்போது ஜனாதிபதியின் அதிகாரங்களை பலப்படுத்த 20 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தனர்.

சுபீட்சமான நோக்கு என்று தேர்தல் விஞ்ஞாபனத்தை கொண்டு வந்திருந்தார். அதனை நாடு இருக்கும் நிலைமையுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். அதில் ஜனாதிபதி வேட்பாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி விசேட முன்மொழிவு ஒன்றை முன்வைத்துள்ளார். அதில் வருமான வரி, பெறுமதி சேர் வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி என பல்வேறு வரிகள் குறைக்கப்படும் என்று கூறப்பட்டது.

அப்போது நாட்டின் நிதி அமைச்சராக இருந்த மங்கள சமரவீர, இந்த முன்மொழிவுகளை அமல்ப்படுத்தப்பட்டால் இலங்கை லெபனான் போன்று நெருக்கடிக்குள் தள்ளப்படும் என்று கூறியிருந்தார். இதன்படி அவரின் எச்சரிக்கை இன்று உண்மையாகியுள்ளது என்றார்.

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும். அவரை வைத்துக்கொண்டு நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது. பிரதமர், அமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர் ஆகியோர் இராஜினாமா செய்தனர். இதற்கு காரணம் என்ன?. அதேபோன்று அரசாங்கத்தில் இருந்தவர்கள் ஏன் சுயாதீன தரப்பினராக மாறியுள்ளனர்.

இந்நிலையில் இந்த பாராளுமன்றம் இனினும் அரச, எதிர் தரப்பு என்று இருக்க முடியாது. சுயாதீன உறுப்பினர்களையும் கொண்டிருக்க முடியாது. ஒவ்வொருவரும் எழுந்து சுயாதீனம் எனக் கூறிக்கொள்கின்றனர். ஆனால் அவ்வாறு இருக்க முடியாது. நிலையியல் கட்டளைக்கு அமைய அரச, எதிர்க்கட்சியாக மட்டுமே இருக்கலாம். சுயாதீனம் என்பது எங்களின் முறையல்ல.

எவ்வாறாயினும் ஜனாதிபதி நிச்சயமாக வெளியேற வேண்டும். ஜனாதிபதியே தவறு செய்தவர். அவர் மக்கள் ஆணையையும் மீறிவிட்டார் என்றார்.

# அதிகாரிகளுடன்...

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் கலந்துரையாடியுள்ள நிலையில், நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டிருந்த தொழிநுட்ப மட்ட கலந்துரையாடலின் பின்னர் முதற்கட்ட ஒப்பந்தங்களை இம்மாத இறுதிக்குள் செய்துகொள்வது குறித்தும் பணியாளர்கள் மட்டத்தில் உடன்படிக்கையை நிறைவு செய்வதற்காக பிரதிநிதிகள் குழுவை விரைவில் நாட்டிற்கு அனுப்புமாறும் பிரதமர் வலியுறுத்தியுள்ளார். நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க இடைக்கால கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார். இலங்கை மக்களுக்கு போதுமான உணவு மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் திட்டங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவைத்...

பாராளுமன்றத்தில் நேற்று (8) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அனைவரும் அமைச்சுப்பதவிகளை பெற வேண்டுமென்ற தேவையில்லை. அபிவிருத்திக்காகவும் பிரச்சினையில் இருந்து மீண்டு வரவும் பாராளுமன்றத்தை நிறுவனமாக நாங்கள் பயன்படுத்த வேண்டும். இந்த இடத்தில் இருந்து எஞ்சியுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். நான் நேற்று (நேற்றுமுன்தினம்) மாலை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளருடன் கலந்துரையாடினேன். எமது வேலைத்திட்டங்களுக்கு அமைய செயற்படுவோம். இங்கே இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டாலே மற்றைய நாடுகளிடம் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு சிறந்த முடிவை வழங்குவதாக அவர் கூறியுள்ளார். இதன்படி இந்த மாத இறுதிக்குள் இந்த வேலைத்திட்டங்களை நிறைவு செய்ய முயற்சிக்க வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

எம்மிடத்தில் இப்போது எரிபொருள் இல்லை. நிலக்கரி இல்லை. எந்தவொரு நாடும் இதற்காக பணம் கொடுக்கப்போவதில்லை. இதற்காக இந்தியா மட்டுமே கடனை வழங்குகின்றது. கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்கப்படுகின்றது. இதற்கான நிதி வேகமாக முடிவடைந்து வருகின்றது. எரிபொருள், மின்சாரம் என்பன முக்கியமாகும். பிள்ளைகள் படிக்கவும், தொழிற்சாலைகளை நடத்திச் செல்லவும் வேண்டும் எனக் கூறியே நாங்கள் நிதியை பெற்றுக்கொள்கின்றோம். எனினும் இந்தியா எமக்கு உதவிகளை வழங்குவதற்கு இந்தியாவில் சிலர் எதிராகவே இருக்கின்றனர். ஏன் இலங்கைக்கு இப்படி கொடுக்கின்றீர்கள் என அவர்கள் கேட்பதாகவும் கூறப்படுகின்றது என்பதனை இந்த சபையில் கூறிக்கொள்கின்றேன் என்றார்.

# ஜனாதிபதிக்கு...

அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் கோபம், மே 9 ஆம் திகதி அமைதியின்மை மற்றும் வன்முறைக்கு வழிவகுத்ததாக தெரிவித்த அவர், தீர்வுகளைக் காணும் வரை இந்த நிலைமை குறையாது என்றும் தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகம் தொடர்பில் பிரதமரும் எரிசக்தி அமைச்சரும் முன்வைத்துள்ள கருத்துக்கள் முரண்பாடானவை என்றும் குறிப்பிட்டார்.

சபையில் உரையாற்றிய அமைச்சர், இன்று (நேற்று) முதல் எரிபொருள் விநியோகம் வழமை போல இடம்பெறும் என தெரிவித்திருந்த நிலையில், எதிர்வரும் மூன்று வாரங்கள் கடினமாக இருக்கும் என பிரதமர் தெரிவித்திருந்தார். புகழ்பெற்ற அரசியல்வாதிக்கும் அனுபவம் இல்லாத அமைச்சருக்கும் உள்ள தெளிவான வித்தியாசம் இதுதான் என்றும் ராஜித எம்.பி சுட்டிக்காட்டினார்

அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் அறிக்கைகளை வெளியிடுவதை அமைச்சர்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அவ்வாறான அறிக்கைகளின் துல்லியம் குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

# வெளிநாடு...

சிலாபம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், கல்பிட்டி, மாரவில, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்ச

ட்டவிரோதமாகவும் மிகவும் ஆபத்தான வகையிலும் நாட்டிலிருந்து வெளியேற்ற முயலும் ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகி தமது உயிர்களையும் உடமைகளையும் பணயம் வைப்பதைத் தவிர்க்குமாறும் கடற்படை பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், இதற்காக பயன்படுத்தப்படும் படகுகள் காலாவதியான மீன்பிடி படகுகள் எனவும், அவற்றின் ஊடாக சட்டவிரோதமாகக் குடிபெயர முற்பட்டால் உயிருக்கு அதிக ஆபத்தை ஏற்படுத்தும் எனவும் கடற்படை எச்சரித்துள்ளது.

# தமிழ் மொழி...

பாராளுமன்றத்தில் நேற்று (8) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை தெரிவித்திருந்தார்.

நாட்டில் மொத்தமாக 396 தேசிய பாடசாலைகளும், 9590 மாகாண பாடசாலைகளும் இருக்கின்றன. இதில் தேசிய பாடசாலைகளில் தமிழ் மொழி மூலமாக அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர் எண்ணிக்கை 7488 ஆகும். தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 7371 ஆகும். வெற்றிடமாக இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 117 ஆகும். நாட்டில் இருக்கும் மொத்த தேசிய பாடசாலைளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 43030. தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 39460. மொத்தமாக 3570 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

அதேபோன்று மாகாண பாடசாலைகளில் மொத்தமாக சுமார் 8000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் சில மாகாணங்களில் மேலதிக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். அதனால் தற்போது காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதற்காக 2018,2019,2020 காலப்பகுதியில் அரச சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளில் 35வயதுக்கு குறைந்த ஆசிரியர் தொழிலுக்காக விரும்பம் தெரிவித்திருப்பவர்களின் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரி, 22000 பேரை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றார்.

# முட்டாள்தனமான...

இந்த முடிவானது இன்று அரிசி விலை கடுமையாக உயர்வதற்கு வழிவகுத்தது மட்டுமல்லாமல், உணவு நெருக்கடிக்கும் வழி வகுத்துள்ளது. இது மாத்திரமன்றி எதிர்காலத்தில் மக்கள் தொகையில் சுமார் 1/3 பகுதியினர் ஊட்டச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரும் இரண்டு வேளை உணவுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த வேண்டியிருக்கும் என தற்போதைய பிரதமரும் கூட கூறுகிறார்.

வேகமாக உயர்ந்து வரும் பொருட்களின் விலைகள் காரணமாக மனித நுகர்வுணவு வேளையில் புரதத்தின் அளவு படிப்படியாக குறைந்து வருகின்றன. இதற்குப் பொறுப்பானவர்களும், பொறுப்புக்கூற வேண்டியவர்களும் தங்களின் தவறுக்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்டாலும் கூட, தவறைத் திருத்துவதற்கு இது மாத்திரம் பரிகாரமாக அமையாது.

# மலையக மக்களுக்கு...

நாட்டில் இனவாதம், மதவாதம் பேசாது யுத்தம் செய்யாது தேசிய அபிவிருத்திக்கு பாடுபட்ட மலையக மக்களுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. நாம் பயங்கரவாதிகள் அல்ல, இந்த அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல, இந்த நாட்டிற்கு எதிரானவர்களும் அல்ல. நாம் இந்த நாட்டினை நேசிக்கின்றோம். ஆனால் எமது சமூகத்தை நீங்கள் தொடர்ச்சியாக ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்கள் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது, பதுளை மாவட்டத்தில் 16 கலாசார நிலையங்கள் நிர்மாணிப்பதற்கும் பணி நிறுத்தப்பட்டிருப்பது தொடர்பாகஎழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வழங்கிய பதில் பொய்யென சுட்டிக்காட்டி விவாதித்த போதே அவர் இதனை கூறினார்.

தோட்டப்புற மற்றும் நகர பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் பதுளை மாவட்டத்தில் 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2019ஆம் ஆண்டில் அங்கிகாரம் வழங்கியிருந்த தற்போதைய பிரதமர் 100 மில்லியன் ரூபாய் ஒதுக்கியிருந்தார் என்றார்.





பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

பாதணிகள் சீருடையின்றி வரும்

# மாணவர்களிடம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டாம்

பாடசாலைகளுக்கு சீருடை இல்லாமலும் பாதணிகள் இல்லாமலும் வருகை தரும் மாணவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாமென, கல்வி அமைச்சின் ஊடாக விரைவில் அறிவித்தல் ஒன்று சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது எதிர்க்கட்சி எம்.பியான துஷார இந்துனில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாட்டில் அமல்ப்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு சட்டத்தால், 2020ஆம் ஆண்டு பாடசாலை நாட்கள் 194 ஆக இருந்த போதிலும் மேல் மாகாணத்தில் 94 நாட்களே பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. ஏனைய மாகாணங்களில் 114 நாட்களே கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

அதேபோல 2021ஆம் ஆண்டு 229 பாடசாலை நாட்களில், மேல் மாகாணத்தில் 102 நாட்களே பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது நூற்றுக்கு ஐம்பது சதவீதம் குறைவாகும். அதேபோல் ஏனைய மாகாணங்களில் 143 நாட்களே கற்றல் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

பாடசாலை நாட்கள் குறைக்கப்படும் போது முதலாம் இரண்டாம் தர மாணவர்களே அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக முதலாம் இரண்டாம் தரங்களிலேயே எழுத்து இலக்கம் என்பவற்றை மாணவர்கள் கற்றுக் கொள்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

எனவே இதன் அடிப்படையிலும் பாடசாலை நாட்களை குறைக்க முடியாது. எவ்வாறாயினும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினைகளால் மாணவர்களும் ஆசிரியர்களும் காலதாமதமாகி பாடசாலைகளுக்கு வர வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதன்போது அவர்களிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாமென தான் அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு –யாழ்ப்பாணம் கடுகதி ரயிலுக்கு

## எரிபொருளுக்காக ரூ. 13 இலட்சம்




கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான இரவு நேரத்தில் கடுகதி ரயிலை இயக்குவதற்கு எரிபொருளுக்காக மட்டும் 13 இலட்சம் ரூபாய் செலவாகும் நிலையில் வருமானமாக 10 இலட்சம் ரூபாவையே பெறக்கூடியதாக இருக்குமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது அரச தரப்பு எம்.பியான பிரேம்நாத் சி தொலவத்த எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் ரயில்களை இயக்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் ரயில் கட்டணங்கள் தொடர்பாக கொள்கையொன்றை வகுக்க வேண்டும். பஸ் கட்டணத்தில் பாதியையாவது ரயிலுக்கு அறவிட வேண்டும்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரை இரவு நேரத்தில் கடுகதி ரயிலை இயக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ள போதிலும், எரிபொருளுக்காக மட்டும் 13 இலட்சம் ரூபாய் செலவாகும்.500 ஆசனங்களுக்கு ஒரு பயணியிடம் இருந்து 2000 ரூபாய் அறவிடப்பட்டாலும் 10 இலட்சம் ரூபாவே பருமனாக கிடைக்கும். அதற்கமைய சுமார் 3 இலட்சம் ரூபாய் நஷ்டத்தை சந்திக்க நேரிடும் என்றார்.

## நான் அசுத்தங்களுடன் இருப்பதில்லை



அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேன் முறையீட்டில் நீதிமன்றத்தால் மீண்டும் குற்றவாளியாக்கப்பட்டால் அவரும் இந்த இடத்தில் இருக்க முடியாது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க சபையில் தெரிவித்தார். நான் அசுத்தங்களுடன் இருப்பதில்லை எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) இடம்பெற்ற விவாதத்தின் போது, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான துஷார இந்துனில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் குறுக்கீட்டு கேள்வியொன்றை முன்வைத்த போதே பிரதமர் இதனை கூறியிருந்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவை நீதிமன்றம் குற்றவாளி என தீர்ப்பளித்திருக்கின்றது. அந்த தீர்ப்புக்கு எதிராக மேன் முறையிட அவருக்கு இன்னும் இரண்டு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. மேன் முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம். உயர் நீதிமன்றம் அவர் குற்றவாளி என தீர்ப்பளித்தால், அவருடன் என்னால் இந்த இடத்தில் அமர முடியாது, நான் இவருடன் இருக்கப்போவதும் இல்லை. ஏனெனில் நன் அசுத்தங்களுடன் இருப்பதில்லை. . அத்துடன் அவருக்கும் இந்த இடத்தில் அமர முடியாது என்றார்.

523 மில்லியன் ரூபாவுக்கு அதிக பெறுமதியான

## நகைகளை மீட்க முடியாத நிலையில் தமிழர்கள்



வடக்கில் இயங்கும் நிதி நிறுவனமொன்றின் நிதி மோசடியினால் அடகு வைக்கப்பட்ட 523 மில்லியன் ரூபாய்க்கு அதிக பெறுமதியான நகைகளை மீட்க முடியாத நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி யான எஸ். கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வடக்கில் உள்ள நிதி நிறுவனம் ஒன்று மிகவும் மோசடியான முறையில் மக்களிடம் பணம் அறவிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இந்த நிறுவனத்திடம் தனது நகை ஒன்றை 100,001 ரூபாய்க்கு ஒருவர் அடகு வைத்தார். அந்தப்பணத்தில் அவர் 76,000 ரூபாவை செலுத்திவிட்டார். மிகுதிப்பணமாக 24,001 ரூபாய் செலுத்த வேண்டும். ஆனால் அந்த நிதி நிறுவனம் இவர் இன்னும் 74,000ரூபாய் செலுத்த வேண்டுமென அறிவித்துள்ளது. இவ்வாறு பல பேரிடம் அந்த நிதி நிறுவனம் மோசடியான முறையில் பணத்தை அற விடுகின்றது.

இதனால் வடக்கு மக்களினால் அடகு வைக்கப்பட்ட 523 மில்லியன் ரூபாய்க்கு அதிக பெறுமதி கொண்ட நகைகளை மீட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நகைகளை குறிப்பிட்ட திகதியில் மீட்காது விட்டால் அதனை அந்த திகதியில் ஏலம் விட்டு நகையின் முழுப் பெறுமதியையும் நிறுவனம் எடுக்க நான் அதிகாரம் வழங்குகின்றேன் என அடகு வைப்பவர்களிடம் அந்த நிதி நிறுவனத்தினால் கையெழுத்துக்கடிதம் பெறப்படுகின்றது.

இவ்வாறு கடிதம் பெற்று நகையின் முழுப்பெறுமதியையும் நிதி நிறுவனம் பெற மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளதா?இது தொடர்பில் நிதி அமைச்சர் பதில் வழங்க வேண்டும். போரினால் அழிக்கப்பட்ட எமது மக்களிடமிருந்து இந்த நிறுவனத்தினால் நகைகள் பணம் சுருட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

சரவக்கட்சி அரசாங்கத்தினால் மட்டுமே

## இலங்கையை மீட்க முடியும்



இடைக்கால சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைத்து பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதியும் அறிவித்தால் மாத்திரமே பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்பதற்கான நிதி உதவியை வழங்குவோம் என இலங்கைக்கு நிதி உதவி வழங்கக்கூடிய சர்வதேச அமைப்புகள் அறிவித்துள்ளதாகவும் எனவே சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்கும் நடவடிக்கைகளுக்கு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று(8) பிரதமரின் உரை தொடர்பான விவாதத்தின் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியிருந்தார்.

சம்பிக்க ரணவக்கவின் யோசனை தொடர்பில் தாம் மகிழ்ச்சி அடைவதாக தெரிவித்த அவர், அனைத்து கட்சிகளையும் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவுடன் மூன்று மாதங்களுக்கு முன்பே தாம் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு நிதி உதவி அளிக்க கூடிய ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்துரையாடியுள்ளதாகவும், நாட்டில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைத்தால் மாத்திரமே தாம் உதவ முன்வருவதாக அவர்கள் தெரிவித்ததாகவும் கூறினார்.மேலும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான திகதியும் கலந்துரையாடி அறிவித்தால் மட்டுமே தாம் இலங்கைக்கு உதவுவதாக அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.



## மின்கட்டண சுமையை மக்கள் மீது சுமத்த முடியாது

மின் கட்டணத்தை நூற்றுக்கு 300 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டும் என மின்சார சபை வலியுறுத்தியுள்ள போதிலும் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் இந்த யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பிக்க போவதில்லை என மின்சக்தி மற்றும் வலுசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர சபையில் தெரிவித்தார்.

மின்சாரசபை எதிர் கொண்டுள்ள நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டும் என்பதற்காக மின்கட்டண சுமையை மக்கள் மீது சுமத்த முடியாது. அதேபோல் மின்சார சபை மாபியாக்களின் நோக்கத்திற்கு ஒருபோதும் இடமளிக்கவும் முடியாது. எனவே நிச்சயம் மின்சார சட்டத்தில் திருத்தம் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று (8 இவ்வாறு தெரிவித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர மேலும் கூறுகையில்,

இலங்கை மின்சார திருத்தச்சட்டமூலம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் சேவையாளர்களில் ஒருசிலர் தவறான கருத்துக்களை சமூக மயப்படுத்த முயற்சிக்கிறார்கள்.இச்சட்டம் திருத்தம் செய்யப்படுவதால் மின்சார சபையின் இதர விடயங்களுக்கான போட்டித்தன்மை குறைவடையாது. தனியார் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களின் தேவைக்கமைய மின்சார சட்டத்தை திருத்தம் செய்ய முயற்சிப்பதாக குறிப்பிடப்படுவது அடிப்படையற்றது என்றார்.

தீர்வுக்காக அனைவரும்

## கைகோர்க்க வேண்டியது அவசியம்

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஓகஸ்ட் மாதமளவில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக முன்னாள் நிதி அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவித்துள்ளார். நாம் அனைவரும் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக கைகோர்க்க வேண்டியது அவசியமாகும் எனவும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடினமான சவாலை ஏற்றுக்கொண்டுள்ள பிரதமருக்கு எங்களின் ஒத்துழைப்பை வழங்குகின்றோம். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண எமக்கு குறுகியகால மற்றும் நீண்டகால தீர்வுகளை முன்வைக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கு முன்னர் இதுபோன்று நாடுகள் பல நெருக்கடிக்குள் சிக்கியுள்ளன. சில நாடுகள் இவ்வாறான நெருக்கடிகளில் இருந்து பாடமாக கொண்டு முன்னேறியுள்ளன. அவர்கள் அந்த நாடுகளின் அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையை கொண்டே அதனை செய்தனர். இதேவேளை மலேசியா, தாய்லாந்து, இந்தியா போன்ற நாடுகளும் வீழ்ச்சியடைந்து முன்னேறி வந்தன.

இப்போது எங்களுக்கு மருந்துகள், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. டொலர் நெருக்கடியே இதற்கு காரணமாகும். இந்நிலையில் நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் மூலம் நிதி மற்றும் சட்ட ஆலோசகர்களை நியமித்துள்ளோம். அனைத்து பேச்சுவார்த்தைகளும் வெற்றியடைந்து ஓகஸ்ட் மாதமளவில் உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.



இந்நிலையில் இந்த நாட்டை வெனிசுலா மற்றும் லெபனான் போன்று மாற்றுவதா? அல்லது இந்தியா, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகள் போன்று பலமான எழுந்து தேவையான சக்தியை உருவாக்குவதா என்று கேட்கின்றேன். ஜப்பான், சீனாவுடன் பேசி தீர்க்க முடியுமாக இருந்தால் ஓரளவுக்கு தீர்வுகளை காண முடியும் என்றார்.

## சமூக, கலாசார சீரழிவும் ஏற்படும்



மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாட்டில் தற்போது பொருளாதார சீரழிவு, அரசியல் சீரழிவுடன் அடுத்ததாக சமூக, கலாசார சீரழிவும் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், நாட்டில் தற்போது வன்முறை, கொலை, கொள்ளை, சிறுவர்களை கடத்துதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்தாகவும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (8) இடம்பெற்ற பிரதமரின் குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பெருந்தோட்ட பகுதியில் உள்ள பயன்படுத்தப்படாத காணிகளை விவசாயத்திற்காக தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பது குறித்த பிரதமரின் தீர்மானம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும். பிரதமர் பாராளுமன்றத்தில் அதனை தெரிவித்துள்ள போதும் அது தொடர்பில் உத்தியோகபூர்வமாக தோட்ட நிர்வாகத்திற்கு அறிவித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை ஏமாற்றிவிடும். அதனை கருத்திற்கொண்டு தோட்ட நிர்வாகத்துக்கு முறையாக அறிவிக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு அவ்வாறு காணிகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றார்.

நாட்டில் தற்போது வன்முறை, கொலை, கொள்ளை, சிறுவர்களை கடத்துதல் போன்ற செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இத்தகைய சூழ்நிலையில் அரசியல் நெருக்கடி தீர்க்கப்படாவிட்டால் பொருளாதார நெருக்கடியை தீர்க்க முடியாது. அதேபோல் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது. மாணவர்கள் கல்வியைக் கைவிட்டு தொழிலுக்கு செல்ல தீர்மானித்தால் நாட்டின் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்றார்.

மன்னார் மாவட்டத்திலிருந்து

# மட்பாண்ட தொழில் மாயமாகும் அபாயம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில் காணப்படும் தமிழர்களின் பாரம்பரிய தொழில்களில் ஒன்றாக மட்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தார்கள்.

நிதி நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாகவே தங்களுடைய தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் ,மடுக்கரை, செம்மண் தீவு கருக்காய் குளம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மட்பாண்ட தொழிலாளர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொட்களுக்கான விலையேற்றம் காரணமாக சட்டி, பானை, அடுப்பு, சிட்டி விளக்குகள் போன்ற பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்பு போல் வியாபாரிகள் எவரும் வருவதில்லையென மட்பாண்ட தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனினும், தங்களால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனைச் செய்வதற்காக, தூர பிரதேசங்களுக்கு பொருட்களைக் கொண்டு சென்று கொடுத்தால், செலவுகள் இரண்டு மடங்காகிவிடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தங்களால், தயாரிக்கப்பட்ட பொருட்கள் யாவும் தேங்கி கிடப்பதாகவும் தெரிவிக்கின்றார்கள். எனவே, இந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட்டு,, எரிபொருட்கள் உட்பட அனைத்து பொருட்களும் தடையில்லாமல் விலை குறைவாக கிடைத்தால் மட்டுமே எமது பாரம்பரிய தொழிலை தொடர்ச்சியாக செய்ய முடியும் என்றும் தெரிவித்தனர்.

பாரம்பரிய தொழிலை செய்துக்கொண்டிருந்த பலரும் இந்தத் தொழிலில் இருந்து விலகி வேறு தொழில்களுக்குச் சென்றுள்ளார்கள். தமிழர்களின் பாரம்பரிய தொழிலாக காணப்படும் இந்த மண்பாண்ட தொழிலை தொடர்ந்து செய்வதற்கு தங்களது காலத்தின் பின்பு ஆட்கள் இல்லை எனத் தெரிவித்த மட்பாண்ட தொழிலாளர்கள். மன்னார் மாவட்டத்தில் இந்த மட்பாண்ட தொழில் காலப்போக்கில் அழிந்து போகக் கூடுமென கவலை தெரிவித்துள்ளனர்.

# பெண்ணின் தங்க சங்கிலி அபகரிப்பு

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் - மீசாலை, டச்சு வீதியில் பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அடையாளம் தெரியாத நபர்கள் பறித்துச்சென்றுள்ளனர்.

நேற்று (08) காலை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தனது பிள்ளையை பாடசாலைக்குக் மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்றுக்கொண்டிருந்த போதே, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர், ஆள் நடமாட்டம் இல்லாத பிரதேசத்தில், சைக்கிளை வழிமறித்து, தங்கச்சங்கிலியை அபகரித்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர்.



# திருடியவர் கைது

எம்.றொசாந்த்

மானிப்பாயில் வீட்டை உடைத்து, 6 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களைத் திருடினார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் 24 வயது இளைஞனை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும், சந்தேகநபரினால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் திருட்டுப் போயிருந்த இலத்திரனியல் உபகரணங்களும் பொலிஸாரினால் மீட்டெடுக்கப்பட்டன.

# யாழ்.குடாவில் விசேட சுற்றிவளைப்பு



என்.ராஜ், நிதர்சன் வினோத்

யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரால் யாழ்.குடா நாட்டில் நேற்று (08) விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களை அதிக விலைக்கு விற்றல் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை சேமித்து வைத்திருத்தல் போன்றவற்றை கண்டுப்பிடிக்கும் வகையிலேயே இந்த சுற்றிவளைப்பு தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ் மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இணைப்பாளர் விஜிதரனின் நெறிப்படுத்தலின் கீழ், யாழ் குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் சோதனையிடப்பட்டதோடு எரிபொருள் விற்பனை நிலையங்களின் எரிபொருள் கொள்கலன்களும் கண்காணிக்கப்பட்டன.



# கச்சத்தீவை கொடுக்கக் கூடாது

நிதர்சன் வினோத்

கச்சத்தீவை இந்தியாவுக்கு கொடுக்கும் எந்தவொரு முடிவையும் இலங்கை அரசாங்கம் எடுக்கக்கூடாதென தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ம் நாடு பொருளாதார ரீதியாக பின்னடைந்து இருக்கின்ற போது நாட்டின் பகுதிகளை வேறு நாடுகளுக்கு விற்பனைக்கோ, குத்தகைக்கோ வழங்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

யாழ்.மாவட்டத்தில் மீனவ அமைப்புகளுடன் நேற்று (08) கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்கள், மண்ணெண்ணெயை பெறுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக அந்த கலந்துரையாடலில் ஆராயப்பட்டதுடன், இந்த விவகாரத்துக்கு அரசாங்கம் விரைவில் தீர்வை பெற்றுத்தரவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



# வதந்தியால் குவிந்த மக்கள்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

பெற்றோல் விலை மீண்டும் அதிகரிக்கப்பட உள்ளதாக வெளியான செய்தியை நம்பி, மன்னாரில் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நேற்று (08) மதியம் முதல் நீண்ட வரிசையில் நின்று மக்கள் எரிபொருளை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் ஒரு தடவை மாத்திரமே எரிவாயு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் உயர் அதிகாரிகள் அசமந்த போக்குடன் நடந்து கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு

# தலையை தூக்கியது



கே.எல்.ரி.யுதாஜித்

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குகாய்ச்சல் பரவல் அதிகரித்து வருகின்றது. மே.22 முதல், ஜூன் 03 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 28 பேர் டெங்குகாய்ச்சல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேரும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவரும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 பேரும், கோறளைப்பற்று மத்தி, களுவாஞ்சிகுடி மற்றும் ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருமென 28 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை வாழைச்சேனை, காத்தான்குடி, பட்டிப்பளை,வவுணதீவு, வாகரை, வெல்லாவெளி, ஓட்டமாவடி மற்றும் கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் குறித்த காலப்பகுதிக்குள் இனங்காணப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.




## அம்பாறையில் அள்ளினர்



அம்பாறை நகர எல்லைக்குள் களவாடிய பொருட்களுடன் நால்வர், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில், போதைப்பொருள் வர்த்தகர்களும் அடங்குகின்றனர். அவர்களிடமிருந்து 22 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள், மற்றும் 12 இலட்சம் ரூபாய் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவர்களை கைதுசெய்யும் போது, அவர்களிடமிருந்து 11 ஆயிரம் மில்லிகாரம் கேரள கஞ்சா, 300 மில்லிகிராம் ஹெரோய்ன் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர்.

(வசந்த சந்திரபால)

# விவசாய காணிகளை விடுவித்து தாருங்கள்

நூருள் ஹுதா உமர்



அம்பாறை மாவட்டத்தில் கையகப்படுத்தி வைத்திருக்கின்ற 14,700 ஏக்கர் விவசாய காணிகளையும் அரசாங்கம் உடன் விடுவித்து தர வேண்டுமென மனித எழுச்சி நிறுவனத்தின் பணிப்பாளரும், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் அமைப்பாளருமான நிஹால் அஹமட் கோரிக்கை விடுத்துள்ளார்.

சம்மாந்துறையில், அப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்டு உள்ள விவசாய குடும்பங்களுக்கு விழிப்பூட்டல், அறிவூட்டல், வழிகாட்டல் ஆகியவற்றை மேற்கொள்கின்ற வகையில், மனித எழுச்சி நிறுவனம், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி ஆகியவற்றால் திங்கட்கிழமை (06) மாலை கூட்டம் நடத்தப்பட்டது.

அடுத்தடுத்த மாதங்களில் பாரிய பட்டினி ஏற்பட்டு விடும் என்று அரசாங்கமே கூறுகின்றது. என்றும் இல்லாதவாறு உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமென்ற நியாயமான அச்சத்தை வெளியிட்ட வண்ணம் உள்ளார்கள்.

இதனால் விவசாய செய்கையில் மிக அதிகளவில் ஈடுபடுங்கள் என்று ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் உள்ளிட்ட அரசாங்க தரப்பினர் அனைவருமே பொதுமக்களை மீண்டும் மீண்டும் கோரிய வண்ணம் உள்ளார்கள்.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் மீது அரசாங்கம் கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக கை வைத்திருக்கின்றது. உள்நாட்டு மோதல் காலம் தொட்டு மூவின மக்களினதும் காணிகள் அரசாங்கத்தால் நுட்பமான முறைகளில் பிடித்து வைக்கப்பட்டு உள்ளன.

4,657 குடும்பங்களின் 14,700 ஏக்கர் விவசாய காணிகள் இவ்விதம் பிடிக்கப்பட்டு உள்ளன அவற்றை விடுவித்து, அதில் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# குளவிகள் கொட்டியதில் வயோதிபர் மரணம்

எச்.எம்.எம்.பர்ஸான்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை - 5 ஆம் வட்டாரம் உமர் வைத்தியர் வீதியைச் சேர்ந்த 74 வயதுடைய மீராலெப்பை அபுசாலியை குளவிகள் கொட்டியமையால், அவர் மரணமடைந்துள்ளார்.

வர்த்தக நிலையம் ஒன்றிற்கு சென்று கொண்டிருந்த போது, கட்டடமொன்றில் கட்டியிருந்த குளவிகள் களைந்துவந்து கொட்டியுள்ளது. பாதிக்கப்பட்ட நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், ஏற்கெனவே அவர் மரணமடைந்துவிட்டார்.



# முதியவர் சடலமாக மீட்பு

எச்.எம்.எம்.பர்ஸான்

உயிரிழந்த நிலையில் 69 வயதான பிள்ளையான் காணேசமூர்த்தி சடலமாக, நேற்றுமுன்தினம் (07) மீட்கப்பட்டுள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வீ.சி மைதானத்தின் ஓரத்தில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், ஆறு நாட்களுக்கு முன்னர், வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# தமிழக அன்பளிப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன



இந்திய தமிழ் நாட்டிலிருந்து அன்பளிப்பாக கிடைக்கப் பெற்ற உலருணவுப் பொதிகள் காத்தான்குடி பிரதேச செயலப் பிரிவுக்கு வழங்கிவைக்கும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் (07) இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கென முதற்கட்டமாக கிடைக்கப்பெற்றுள்ள 50,000 பக்கட் அரிசி மற்றும் 3,750 பக்கட் பால்மா என்பனவற்றை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவிற்கும் முன்னுரிமை அடிப்படையில், மாவட்ட செயலகத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், காத்தான்குடி - 165 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சமுர்த்தி பயனாளிகளுக்கும், சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்குமான 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம். தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

குயின்ஸ்டவுன் தோட்டக் காணியை

# கிராமவாசிகள் அபகரிக்க முயற்சி

■ எம். செல்வராஜா

ஹாலி-எல -குயின்ஸ்டவுன் தோட்டத்தின் ஒரு பகுதியை, கிராமவாசிகள் ஆக்கிரமித்து தம் வசமாக்கிக் கொண்டதையடுத்து, தோட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று (8) இடம்பெற்றது.

ஹாலி- எல்லையில் 70 குடும்பங்களைச் சேர்ந்த கிராமவாசிகள், குயின்ஸ்டவுன் தோட்டத்தின் கிராமத்தை அண்மித்த தோட்டக் காணியை ஆக்கிரமித்து, தமக்குத்தாமே எல்லைகள் போட்டு பிரித்துக் கொண்டு செயற்பட்டனர்.

இது குறித்து குயின்ஸ்டவுன் தோட்ட முகாமையாளர் ஹாலி-எல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினை செய்துள்ளார்.

இம்முறைப்பாட்டையடுத்து, ஹாலி-எல்லைப் பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து, தோட்டத்தை ஆக்கிரமித்திருந்த கிராமவாசிகளுடன் சுமூக பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு, அங்கிருந்து தற்காலிகமாக அவர்களை வெளியேறுமாறு



கூறியதையடுத்து, ஆக்கிரமிப்பாளர்கள் பொலிஸார் வழங்கிய உறுதிமொழிக்கமைய, தோட்டத்தை விட்டு வெளியேறினர்.

குறிப்பிட்ட தோட்டக்காணி காடாக்கப்பட்டு வருவதினால், அக்காணியை விவசாயத்திற்கு பயன்படுத்துவதற்கும், வெறுங்காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ள அரசு விடுத்துள்ள கோரிக்கைக்கமையவுமே, தமக்குத்தாமே குறிப்பிட்ட காணியை பிரித்துக் கொண்டு செயல்பட ஆரம்பித்தோம். தோட்ட முகாமைத்துவம் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிபந்தனைகளை முன்னிலைப்படுத்தி, அக்காணியில் விவசாயத்தை மேற்கொள்ள அனுமதியைப் பெற்றுத் தருமாறு, கிராமவாசிகள் பொலிஸாரிடம் கேட்டுக் கொண்டனர்.

பொலிசாருக்கும் கிராமவாசிகளுக்குமிடையே ஏற்பட்ட சுமூகப் பேச்சுவார்த்தையின் போது, 'குறிப்பிட்ட தோட்ட முகாமையாளர், தோட்டத்தை பொறுப்பேற்ற கம்பனி முகாமைத்துவம், பிரதேச செயலாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட குழுவினருடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று' பொலிசார் கூறினர். இக் கூற்றினையடுத்து தோட்டத்தை ஆக்கிரமித்திருந்த கிராமவாசிகள், தோட்டத்தை விட்டு தற்காலிகமாக வெளியேறினர்.

ஆறு நாட்களின் பின்னர்

# நோர்வூட் நகருக்கு மண்ணெண்ணெய்

■ எஸ். சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஷ

நோர்வூட் நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 6 நாட்களின் பின்னர், 6,600 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை எரிபொருள் கூட்டுதாபன களஞ்சியசாலையிலிருந்து குறித்த மண்ணெண்ணெய் தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



இதனால் மண்ணெண்ணெய் கொள்வனவுக்காக சுமார 2,000 பேர் வரை நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

இராணுவத்தினரின் பாதுகாப்புடன் தலா 300 ரூபாய்க்கு மாத்திரமே மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது.

இவ்வாறு மண்ணெண்ணெய் கொள்வனவுக்காக வரிசைகளில் நின்றவர்களுள் பெரும்பாலானவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க

# அரசாங்கம் தலையிட வேண்டும்

## கண்டியில் ஹோட்டல் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

■ சேஹ்ன் செனவிரத்ன

வெளிநாடுகளில் இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள பயணத் தடையை நீக்குவதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் என தெரிவித்து, கண்டி நகரில் நேற்று (8) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான ஹோட்டல் பணியாளர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கண்டி, நுவரெலியா, மாத்தளை உள்ளிட்ட பிரதான நகரங்களின் 18 பிரபல ஹோட்டல்களின் முகாமையாளர்கள் உள்ளிட்ட ஏனைய பணியாளர்களும் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை




முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கண்டியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் பணியாளராக கடமையாற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த பெண் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், தற்போது இலங்கை மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையிலான நெருக்கடி தீர்க்கப்பட்டுள்ளதால் ரஷ்யர்கள் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள வேண்டும் என ரஷ்யப் பிரஜைகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

கண்டி மாவட்டத்தில் மாத்திரம் 3 இலட்சத்துக்கு அதிகமானவர்கள் சுற்றலாத் துறையில் நேரடியாக அல்லது பகுதியளவில் வருமானத்தைப் பெற்று வருவதாகவும் தற்போது அவர்களின் வருமானம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு அதிக சுற்றலாப் பயணிகளை நாட்டுக்கு வரவைழைப்பதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.



பதுளை– தெமோதர வீதி

# புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தம்

## மக்கள் பாதிப்பு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை- ஸ்பிரிங்வெளி ஊடாக தெமோதர வரையான வீதி, காபட் இடப்பட்டு புனரமைப்பு செய்யும் பணிகள், கடந்த 3 வருடத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தற்போது அத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் குறித்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரிதும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இதன்கீழ், பதுளை, கிந்தகொட சர்வோதய மாவட்ட மத்திய நிலையத்துக்கு அருகில் உள்ள மதகு உடைக்கப்பட்டு புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், இதனால் இந்த பகுதி விபத்துகள் இடம்பெறும் பகுதியாக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவு நேரங்களில் இந்த வீதியில் கவனமாக பயணிக்குமாறும்அறிவிப்பு பலகைகள் தொங்கவிடப்பட்டிருந்த நிலையில், இரவில் அந்த அறிவிப்பு பலகைகள் காட்சிப்படுத்தம் அளவுக்கு ஒளி விளக்குகள் பொருத்தப்படாமை காரணமாக இப்பகுதியில் இரவில் விபத்துகள் பதிவாவதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

# பெட்ரோல் உண்டு: டீசல் இல்லை



■ பாலித ஆரியவன்ஸ

பதுளை நகருக்கு பெட்ரோல் கிடைத்துள்ள போதிலும் டீசலுக்கு நேற்று (8) பாரிய வரிசை காணப்பட்டது.

கடந்த இரண்டு நாள்களாக குறித்த டீசல் வரிசையில் காத்திருந்தும் இதுவரை டீசல் கிடைக்கவில்லை என வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

தனியார் பஸ்களுக்கும் டீசல் கிடைக்காமை காரணமாக, சில தனியார் பஸ் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# 16 ஆடுகளுடன் சாரதி கைது

■ ராமு தனராஜா

லுணுகலை பகுதியில் இருந்து பிபிலை நோக்கி சென்று கொண்டிருந்த சிறிய ரக லொறி ஒன்றுக்குள் இருந்து, 16 ஆடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றைக் கொண்டுச் சென்ற சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

லுணுகலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த ஆடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், 32 வயதுடைய லொறியின் சாரதி மிருக வதை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் ஆடுகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதி பத்திரம் இருந்த போதிலும், அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆடுகளை விடவும் அளவுக்கு அதிகமான ஆடுகளை சிறிய லொறியில் கொண்டு சென்றமையாலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்

சந்தேகநபரை பதுளை நீதவான் நீதிமன்றில ஆஜர்படுத்தபட உள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.







## கர்ப்பிணிகளுக்கு...

கொட்டகலை பொது சுகாதார பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு, உலருணவு பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு கொட்டகலையில் நேற்று (8) நடைபெற்றது. சுப்பையா செல்லம் ஞாபகார்த்த கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில், தலைவர் எஸ்.பத்மராஜ் தலைமையில் இந்த உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. எஸ்.கணேசன்

வகுப்பறைக்கு தீ வைப்பு

# அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

■ எஸ். சதீஸ்

ஹட்டன் கல்விவலையத்துக்கு உட்பட்ட நோர்வூட் சென்-ஜோன்டிலரி தமிழ் வித்தியாலயத்தின் வகுப்பறை ஒன்றுக்கு இனந்தெரியாதோர் தீ வைத்த சம்பவம் தொடர்பில், இந்த மாதம் 6ஆம் திகதியே ஹட்டன் வலய கல்வி பணிமனைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பணிமனையின் பணிப்பாளர் ஆர். சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

மே மாதம் 27ஆம் திகதி தீ வைக்கப்பட்டதாக பாடசாலை அதிபரால் ஹட்டன் வலய கல்வி



பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த திங்கட்கிழமை குறித்த பாடசாலையின் ஆசிரியர்களால் பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, இது தொடர்பில் பணிப்பாளரை நாம் தொடர்பு கொண்டு வினவிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பவம் இடம்பெற்ற அன்றே, அதிபர் அதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்திருக்க வேண்டும். இது தொடர்பில் கோட்டக் கல்வி பணிப்பாளர் ஊடாக விசாரணைகளை மேற்கொண்டு, வலயக் கல்வி பணிமனைக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நுவரெலயா பிரதேச சபையின்

# உறுப்பினருக்கு தடை விதிப்பு

■ ஆ.ரமேஸ்



நுவரெலியா பிரதேச சபையின் மீப்பிளிமான வட்டாரத்துக்குரிய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அஜித் உயன்கொடவுக்கு எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு சபை அமர்வில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை , நுவரெலியா பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடன் தவிசாளர் வேலு யோகராஜ் சபைக்கு அறிவித்துள்ளார்.

மாதாந்த அமர்வு தவிசாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் (07) காலை நடைபெற்றதுடன், இதன்போது இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த உறுப்பினர், நுவரெலியா பிரதேச சபைக்கு தற்போது சொந்தம் அல்லாத கந்தப்பளை நகரிலுள்ள காணி தொடர்பில் தவறான தகவல்களை உயரதிகாரிகளுக்கு அறிவித்தும்,செய்திகளை பரப்பியும் சபைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நுவரெலியா பிரதேச சபைக்கு எதிராகவே தனது செயற்பாட்டை இவர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளதாகவும் இவர் தொடர்பில் சபை உறுப்பினர்கள் முடிவெடுக்க வேண்டும் எனவும் தவிசாளர் பிரேரணை ஒன்றை முன்வைத்ததுடன், ஏனைய உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

மாத்தளையில்

# சூன்பாண் விற்பனை இடைநிறுத்தம்

■ இந்திக அருணகுமார

மாத்தளை மாவட்டத்தில் தற்போது சூன் பாண் விற்பனை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கோதுமை மா உள்ளிட்ட பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் குறித்த வண்டிகளின் எரிபொருள் செலவு அதிகரிப்பு காரணமாக, மாத்தளை மாவட்டத்தில் 95 சதவீதமான சூன் பாண் வண்டிகளில் சிற்றுண்டி உணவு விற்பனை இடைநிறுத்தப்பட்டுள்ளது என பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மாத்தளை மாவட்டத்தில் பெரும்பாலான பேக்கரிகளில் ஒரு இறாத்தல் பாண் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதுடன், கோதுமை மாவுடன் தொடர்புடைய ஏனைய சிற்றுண்டிகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த சூன் பாண் வண்டிகளின் இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அதிகமான இளைஞர்கள் தொழில்வாய்ப்பை இழந்துள்ளனர்.

# வழிப்பறிகள் அதிகரிப்பதால் விழிப்பாகவே இருக்கவேண்டும்

வீட்டிலிருந்து வெளியேறியவர் வீட்டுக்குத் திரும்புவரா? என்ற சந்தேகம் ஒவ்வொரு குடும்பத்தினரிடமும் வலுப்பெறத் தொடங்கிவிட்டது. அந்தளவுக்கு நாட்டின் நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டே செல்கிறது. அதற்காக வீட்டுக்குள்ளே எந்நாளும் இருந்துவிடமுடியாது. உடல், உள ரீதியில் பல்வேறான நெருக்குவாரங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

மர்மமாய் இறந்து கிடக்கும் சடலங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கையில், தங்களுடைய உயிர்களைப் பறித்துக் கொள்வோரும் அதிகரித்துள்ளனர். இதற்கிடையே பழைய பகையைத் தீர்த்துக்கொள்வதற்காக, துப்பாக்கிப் பிரயோகங்கள், வாள்வெட்டுகள் பகிரங்கமாகவே அரங்கேற்றப்படுகின்றன. இவையெல்லாம் நாட்டில் சட்டமில்லையென்பதை படம்போட்டுக் காட்டிவிடும்.

குடும்பத்தைக் கொண்டு நடத்துவதில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார ரீதியிலான நெருக்கடியால், குடும்பத் தலைவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலிருந்து மீண்டெழ முடியாதவர்களே, தவறான தீர்மானங்களை எட்டிவிடுகின்றனர். வெறுங்கையுடன் வீட்டுக்குத் திரும்புவதை விடவும், உலகை விட்டே சென்றுவிடத் தீர்மானித்துவிடுகின்றனர். அதுதான் தவறான முடிவாகும்.

ஏனெனில், தன்னுடைய உயிரை மாய்த்துக் கொள்வதன் ஊடாக, தன்னையே நம்பியிருக்கும் குடும்பத்தை அநாதையாக்கிவிடுகின்றீர்கள். தவறான தீர்மானத்தை எடுக்கும் உங்களைப் போன்ற திராணியற்றவர்களின் முடிவை, அக்குடும்பத்தினரும் எடுக்கக்கூடும். அதுவே, அடுத்தடுத்தவர்களின் மனங்களில் தொற்றிக்கொள்ளும். ஆகையால், சிரமத்தை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போடுவதற்குக் கற்றுக் கொள்ளவேண்டும்.

மற்றவர்களின் அடியொட்டி நடக்கும் எவருக்குமே பிரச்சினை வராது, புதுவழியில் பயணிப்போரின் வாழ்க்கை, மேடு, பள்ளங்கள், பிரச்சினைகளைக் கடந்தவையாக இருக்கும். புதுப்புது முயற்சிகளுக்கும் வித்திட்டுவிடும் என்பதை இனிமேலாவது கவனத்தில் கொண்டு, முன்னோக்கிப் பயணிக்க முயற்சிக்க வேண்டும். நெருக்கடியான காலகட்டத்தை முடிச்சுமாறிகள், வழிப்பறிக் கொள்ளையர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். இரண்டு இறாத்தல் பாண்களை அபகரித்துச் சென்றமை, பிள்ளைகளுக்காக வாங்கி வைத்திருந்த உணவுப் பொருட்களை திருடிச்சென்றமை, இப்படி சம்பவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆகையால், தாங்களே விழிப்பாக இருக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி, கள்வர்கள், வழிப்பறிக் கொள்ளையர்களின் கண்களைக் கவர்ந்திழுக்கும் வகையில், விலையுயர்ந்த தங்க ஆபரணங்களை அணிந்துகொண்டு செல்வதை தவிர்ப்பதே நல்லது. அள்ளி அணிந்துகொண்டு வெளியே சென்று, வெறுமையான கழுத்துடனும் காயத்துடனும் வீட்டுக்கு வருவதை விடவும், வெறுமையான கழுத்துடன் வெளியே செல்வதே மேலானது.

ஒவ்வொன்றுக்காகவும் மக்கள் வரிசையில் நின்று கொண்டிருக்கின்றனர். சில அங்காடிகளில் இறாக்கைகள் வெறுமையாகவே காட்சியளிக்கின்றன. கிடைப்பதை கொண்டு வாழவும், பலரும் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டனர். போகின்ற போக்கைப் பார்க்குமிடத்து, நிலைமை இன்னுமின்னும் மோசமடையும்.

தூண்டிவிடாமல் மறைத்துச் கொண்டு செல்லவேண்டும். எல்லா விடயங்களிலும் விழிப்பாக இருப்பதே இன்றைய காலத்தின் தேவையாகும்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தேவையானதை மட்டும் செய்க. மற்றவைகளைக் கழற்றிவிடுக. எம்மவர்களில் அனேகர் தேவையான விடயங்களை மறந்து அல்லது இடைநடுவே கைவிட்டு, எதற்கும் உதவாத காரியங்களை வெகு முனைப்பாகச் செய்வார்கள்.

கடமை முக்கியமானது அதனை நிறைவேற்றுவதற்கான காலமும் முக்கியமானது. அதனை விடுத்து அத்தியாவசியமான கருமங்களை இறுதிநேரத்திர் பரப்பரப்புடன் மேற்கொள்வது கேலிக்குரியது. அவசரமாகச் செய்யும் காரியம் முழுமை ஆகாது.

செய்கின்ற பணிகளில் எவை எவை முக்கியமானவை எனத் தெரிவுசெய்க. அதனை உடனடியாகச் செய்து முடிக்கவும்.

கடமைகளை நிறைவேற்ற புத்திசாலித்தனமும் சிரத்தை, பொறுமை, நிதானம் கட்டாயமனது. பிறருக்கு அல்லது பொதுவான காரியங்களைச் செய்யும்போது அவை எனக்கானது. என்னுடையது, நானே அதற்குப் பொறுப்பானவன் என உறுதியாக எண்ணவும். பொறுப்புணர்ச்சி அற்றவன் வெறுப்புடன் நோக்கப்படுவான்.

-பருத்தியூர் பாலவயிரவநாதன்

# காலி முகத்திடம் போராட்டத்தின் காலாவதி?!



XXXXXXXXXX

ராஜபக்ஷர்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டத்தின் எழுச்சி மெல்ல அடங்கத் தொடங்கிவிட்டது. காலி முகத்திடல் போராட்டக்களமும் சோபையிழந்துவிட்டது. ராஜபக்ஷர்களை முழுமையாக வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று ஆரம்பித்த போராட்டம், மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியிலிருந்து விலக வைக்கும் அளவுக்கான இலக்கை எட்டியது. ஆனால், முதன்மைக் கோரிக்கையான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்கிற விடயம் இலக்கை அடைய முதலே போராட்டம் முடிவுக்கு வரும் நிலையில் இருக்கின்றது.

ராஜபக்ஷர்களுக்கு எதிரான தென் இலங்கையின் எழுச்சி பொருளாதார நெருக்கடிகள், ஊழல் மோசடிகளுக்கு எதிராக நிகழ்ந்த ஒன்று. அங்கு ஆட்சி அதிகார மாற்றம் என்பது குறிக்கோளாக இருந்தது. அதன்மூலம், மோசமடைந்திருக்கின்ற நாட்டின் பொருளாதாரம் சீர் செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகும் என்ற நம்பிக்கை சார்ந்தது.

> **போராட்டக்களம், அதன் இயல்புக்கு ஏற்ற மாதிரியே அடங்கவும் தொடங்கிவிட்டது. அந்தப் போராட்டம் ஒரு கட்டத்தில் மிக அவசியமாக இருந்தது**

ஆனால், கோட்டா தவிர்ந்த ஏனைய ராஜபக்ஷக்களை ஆட்சியில் இருந்து அகற்றினாலும், ஆட்சியை தீர்மானிக்கும் அதிகாரக் கட்டமைப்பில் இருந்து அவர்களை இன்னமும் நீக்க முடியவில்லை. ரணில் விக்ரமசிங்க புதிய பிரதமராக பதவியேற்ற போதிலும், அவரினால் அமைச்சரவைக்குள் தீர்மானங்களை எடுப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கின்றது. மாறாக, ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் இழுப்புக்கு இசைந்து கொடுக்கும் நிலைகளுக்குள்ளேயே அவர் இருக்கின்றார். அடிப்படையில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன என்பது ராஜபக்ஷர்களின் பெயரினால் கட்டியெழுப்பப்பட்ட கட்சி. அதன் அதிகாரங்கள் எல்லாமும் இன்னமும் பசில் ராஜபக்ஷவிடம்தான் இருக்கின்றது.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தையும் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவே கொண்டிருக்கின்றது. பாராளுமன்றத்தில் இன்னமும் பெரும்பான்மையோடு இருக்கின்ற தரப்பு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவே. அதுதான், ரணில் அரசாங்கத்தின் ஆதாரம். அப்படியான நிலையில், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்திடம் பாரப்படுத்தும்-பகிரும் 21ஆவது திருத்தத்தை நிறைவேற்ற விடாமல் தடுக்கும் வேலைத்திட்டங்களில் ராஜபக்ஷக்கள் ஈடுபடுகிறார்கள்.

அது முடியாமல் போனாலும், 21ஆவது திருத்தத்தின் சரத்துக்களில் குளறுபடிகளைச் செய்து, அதனை வலுவிழக்கச் செய்யும் வேலைகளில் அவர்கள் கவனமாக இருக்கிறார்கள். அதன் மூலம்தான், ஆட்சி அதிகாரம் குறித்த தங்களது கனவை மீண்டும் அடையாலாம் என்பது ராஜபக்ஷக்களின் நம்பிக்கை. அப்படியான நிலையில், ராஜபக்ஷக்களை வீட்டுக்கு விரட்டும் போராட்டம் சோபையிழப்பது என்பது ஆபத்தானது.

ரணில் பிரதமர் பதவியை ஏற்றது முதல் இரண்டு தடவைகள் நாட்டு மக்களுக்கு உரையாற்றிவிட்டார். அதுபோல, பாராளுமன்றத்திலும் நாட்டின் நிலைமைகளை விளக்கி நீண்ட உரைகளை நிகழ்த்தியிருக்கின்றார்.

இந்த உரைகளில் எல்லாமும் அவர் திரும்பத் திரும்ப குறிப்பிட்ட விடயங்கள், ‘எதிர்வரும் மாதங்களில் உணவுப் பஞ்சம் ஏற்படப் போகிறது. நாட்டின் எரிபொருள் நெருக்கடி என்பது இப்போதைக்கு முடிவுக்கு வராது’ என்பதாகும். அத்தோடு, இந்த நெருக்கடிக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் தீர்க்க தரிசனமில்லாத பொருளாதார திட்டங்களே காரணங்கள் என்றும் அவர் கூறுகிறார்.

ரணில் உணவுப் பஞ்சம், எரிபொருள் நெருக்கடி பற்றி திரும்பத் திரும்ப கூறி மக்களை அச்சமூட்ட நினைக்கிறார். அதுபோல, ஒரே நாளில் அல்லது குறுகிய காலத்துக்குள் நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கடக்க முடியாது என்றும் கூறி மக்களை அதற்காக தயார்ப்படுத்தத் தொடங்கிவிட்டார். இதனால், மக்கள் அதனை உள்வாங்கத் தொடங்கிவிட்டார்கள். ராஜபக்ஷக்கள் ஏற்படுத்திவிட்டுப்போன பொருளாதார நெருக்கடியை யாராலும் குறுதிய காலத்துக்குள் கடந்துவிட முடியாது. எனவே, ரணிலின் உரைகளை நோக்கி இசைவதுதான் வழி என்று மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ராஜபக்ஷக்கள் ஏற்படுத்திவிட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக போராட்டக்களம் வந்த மக்கள், தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி குறுதிய காலத்துக்குள் தீர்க்கப்பட முடியாதது என்று உணரத் தொடங்கியதும், தங்களது பொருளாதார -வாழ்வாதார கட்டங்களைக் காப்பாற்றுவது சார்ந்து சிந்திக்ககத் தலைப்படுவது இயல்பு. அதனால், நீண்டு செல்லும் போராட்டக்களத்தில் அவர்களினால் பங்களிக்க முடியாமல் போகும்.

> **அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தையும் பாராளுமன்றத்தில் இன்னமும் பெரும்பான்மையோடு இருக்கின்ற ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவே கொண்டிருக்கின்றது**

அதுவும்கூட தென் இலங்கை எழுச்சியை கலகலக்க போதுமானது. எதிர்க்கட்சித் தலைவர் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது, தற்போது கோட்டாவை வீட்டுக்கு விரட்டும் போராட்டம் பற்றி யாரும் பேசுவதில்லை. அது, கலைந்து போகத் தொடங்கிவிட்டது என்று கூறினார்.

அத்தோடு, படித்த சமூகம் நாட்டைவிட்டு வெளியேறவும் தொடங்கிவிட்டதாக குறிப்பிட்டார். சாதாரண மக்கள் தங்களின் வாழ்வாதாரம் குறித்து அல்லாடுவதும், அறிவார்ந்த சமூகம் நாட்டைவிட்டு வெளியேறுவதுமேகூட போராட்டக்களத்தினை கலைக்க போதுமானது. அந்த வகையில், ரணில் பதவியேற்றது முதல், பொருளாதார நெருக்கடி, குறிப்பாக உணவுப் பஞ்சம் குறித்த அச்சுறுத்தலை விடுத்து மக்களை போராட்டக்களத்திலிருந்து அகன்றுபோக வைத்திருக்கிறார்.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான தென் இலங்கையின் எழுச்சி போராட்ட வடிவம் பெற்று ஐம்பது நாட்களைத் தாண்டி நீடித்தமை என்பது எதிர்பார்க்கப்படாத ஒன்று. ஏனெனில், ஆரம்பத்தில் அந்தப் போராட்டம் அதற்கான எந்த தன்மையையும் கொண்டிருக்கவில்லை. ஆனால், காலி முகத்திடம் போராட்டக்களம் திறந்ததும் போராட்டம், ஐம்பது நாட்கள் வரை நீண்டது. அதற்கான ஒரு ஓர்மத்தை மக்களிடம் கொடுத்தது.

அதுதான், தென் இலங்கையில் மூத்த ஊடகவியலாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள் எல்லாமும் இலங்கையில் இதுபோன்று ஐம்பது நாட்கள் நீண்ட ஜனநாயக போராட்டம் இல்லை என்று அறிவிக்கவும் காரணமானது. அவர்களின் கண்களில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் தாய்மாரின் 1600 நாட்களைத் தாண்டி நீளும் போராட்டங்கள் படவில்லை.

பொருளாதார நெருக்கடிகளினால் எழுந்த போராட்டமொன்று அதன் தன்மைகளில்தான் பயணிக்கும். அந்தப் போராட்ட வடிவத்திடம் அரசியல் உரிமைகள் சார்ந்த அறிவோ, எதிர்பார்ப்போ இருப்பதற்கு வாய்ப்பில்லை. அதுதான் காலி முகத்திடம் போராட்டக் களத்திலும் பிரதி பலித்தது. ஆட்சி மாற்றம் மட்டுமே அந்தப் போராட்டத்தின் குறிக்கோள். அது அப்படித்தான் தன்னைக் காட்சிப்படுத்தியது. அங்கு இனமுரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சிந்தனைகளோ எதிர்பார்ப்புக்களோ அங்கு எழவில்லை. அப்படியான நிலையில், காலி முகத்திடல் போராட்டக்களத்திடம் அதனை எதிர்பார்ப்பது காற்றில் பொரி விற்கும் நிலைக்கு ஒப்பானது.

ஆனால், தென் இலங்கையின் ராஜபக்ஷக்களுக்கு எதிரான எழுச்சியை ஒரு சந்தர்ப்பமாக கையாளுவது சார்ந்து தமிழ்த் தலைமைகள் செயற்பட்டிருக்கலாம். அது, பெரியளவில் நிகழவில்லை. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனைத் தவிர அந்தப் போராட்டக்களத்தை பயன்படுத்துவது குறித்து யாருமே சிந்திக்கவில்லை. அதிலும், அந்தப் போராட்டத்திற்கும் வடக்கு கிழக்கு மக்களுக்குமே சம்பந்தமில்லை என்பது மாதிரியான தோற்றப்பாட்டைப் பேணவே சில தமிழ்த் தலைவர்கள் முயன்றார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு எதிராக எழுந்த போராட்டக்களம், அதன் இயல்புக்கு ஏற்ற மாதிரியே அடங்கவும் தொடங்கிவிட்டது. அந்தப் போராட்டம் ஒரு கட்டத்தில் மிக அவசியமாக இருந்தது. குறிப்பிடத்தக்க இலக்கையும் எட்டியது. அத்தோடு, அது கலைந்து போனது என்று எதிர்காலத்தில் பதிவு பெறும்.

## கடிதங்கள்

# உஷாராக இருப்போம்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியுடன், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கிடுகிடுவென அதிகரித்துள்ளன. அன்றாடம் வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு பலரும் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து கொண்டிருக்கின்றனர்.

வீட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதிலும், பலரும் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். விலைகள் இன்னுமின்னும் கூடுமென தகவல்கள் கிடைத்தவுடன், வர்த்தகர்கள் பலரும் பொருட்கள் பதுக்கிவைத்துக்கொள்கின்றனர்.

இந்நிலையில், வீதிகளில் தனியாக செல்வோர், வர்த்தக நிலையங்களுக்குக் தனியாகச் சென்று பொருட்களை கொள்வனவு செய்வோரென, பலரும் குறிவைக்கப்படுகின்றனர். அவர்கள் அணிந்து செல்லும் தங்க ஆபரணங்கள் அபகரிக்கப்படுகின்றன. பொருட்கள் திருடப்படுகின்றன.

ஆகையால், வெளியே செல்லும் போது, பெறுமதியான தங்க ஆபரணங்களை அணிந்துச் செல்வதே தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன், கொள்வனவு செய்யும் பொருட்களையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

இதுதொடர்பில், பொதுமக்களுக்கு பொலிஸார் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகும்.

அதுமட்டுமன்றி வழிபறிகளில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுமிடத்து அவர்களுக்கு உரிய தண்டனையை பெற்றுக்கொடுக்கவும் முயற்சிக்கவேண்டும். அதனூடாகவே வழிப்பறி கொள்ளைகளில் ஈடுபட நினைப்பவர்களுக்கு ஒரு பாடமாக அமையும். இல்லையேல் வெளியில் தலைக்காட்ட முடியாத நிலைமை ஏற்படும்.

த. ராமமூர்த்தி

புதுடெல்லி

### இந்தியாவில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்துவோம்

# அல்கொய்தா எச்சரிக்கை



இந்தியாவில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்துவோம் என அல்கொய்தா பயங்கரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஞானவாபி மதவழிபாட்டு தளம் தொடர்பாக ஆங்கில செய்தி சேனலில் கடந்த 27 ஆம் திகதியன்று நடந்த விவாதத்தில் பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) செய்தித்தொடர்பாளர் நுபுர் சர்மா பங்கேற்றார்.

விவாதத்தில் பங்கேற்ற நபர், இந்து மத கடவுள் சிவலிங்கம் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

அந்த கருத்திற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பேசிய நுபுர் சர்மா, இஸ்லாமிய மத கடவுளின் இறை தூதர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தது.

இந்த விவகாரம் பூதாகாரமானதை தொடந்து நுபுர் சர்மாவை கட்சியில் இருந்து பா.ஜ.க நீக்கியது.

அதேவேளை, இஸ்லாமிய மத கடவுளின் இறை தூதர் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்ததாக பா.ஜ.க அரசு மீது பல்வேறு இஸ்லாமிய நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், இஸ்லாமிய மத கடவுளின் இறை தூதர் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்ததற்காக இந்தியா மீது தற்கொலைப்படை தாக்குதல் நடத்துவோம் என்று அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடபாக 6 ஆம் திகதியன்று பதிவிடப்பட்ட கடிதத்தில், நபிகளின் (இஸ்லாமிய மத இறைதூதர்) கண்ணியத்தை காப்பதற்காக புதுடெல்லி, மும்பை, உத்தரபிரதேசம், குஜராத் ஆகிய பகுதிகளில் நாங்கள் தற்கொலைப்படை தாக்குதல்களை நடத்துவோம்.

தங்கள் முடிவுக்காக, மேலே குறிப்பிட்டுள்ள பிரதேசங்களில் காவி பயங்கரவாதிகள் தங்கள் முடிவுக்காக காத்திருக்க வேண்டும்' என அந்த கடித்ததில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தபடுமென அல்கொய்தா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ள சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கரூர்



## தாயை ஏற்றாமல் சிறுமியுடன் பறந்த பஸ்

கரூர் அருகே தாயை ஏற்றாமல் சிறுமியுடன் அரச பஸ்ஸை, இயக்கிய ஓட்டுநர், நடத்துநர் இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமி ஏறியதுமே ஓட்டுநர் பஸ்ஸை எடுத்ததால் பஸ்ஸூக்குள் இருந்த சிறுமி அம்மா, அம்மா எனக் கதறியுள்ளார், சிறுமியின் தாயும் குழந்தை, குழந்தை என்று கத்திக்கொண்டே பஸ்ஸின் பின்னால் துரத்திச் சென்றுள்ளார். எனினும், ஓட்டுநர் பஸ்ஸை வேகமாக செலுத்தியுள்ளார்.

அப்பகுதியில் இருந்தவர்கள் வாகனங்களில் பஸ்ஸை துரத்திச் சென்று இருவரிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், முறைப்பாடும் செய்தனர். அதனையடுத்தே அவ்விருவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

சென்னை

## கொவிட் ஊரடங்கில் மட்டும் 511 குழந்தை திருமணங்கள்




தமிழகத்தில் கொவிட் ஊரடங்கு முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டபோது ஏராளமான மாணவர்களும், மாணவிகளும் பள்ளிப்படிப்பை தொடராமல் இருந்துள்ளனர்.

இடைநின்ற மாணவ, மாணவிகளை கண்டறிவதற்காக ஆய்வு நடத்தப்பட்டது. அதில், பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. பல மாணவர்கள் வேலைகளுக்கு செல்வதை கண்டறிந்து அத்தகைய மாணவர்கள் மீண்டும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். அதேபோன்று 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவிகளுக்கு அவர்களது பெற்றோர்கள் குழந்தை திருமணத்தை நடத்தியது தெரியவந்தது

13 வயதே ஆன 8ஆம் வகுப்பு மாணவிகள் 10 பேருக்கும், 9ஆம் வகுப்பு மாணவிகள் 37 பேருக்கும் , 10ஆம் வகுப்பு மாணவிகள் 45 பேருக்கும் கொவிட் ஊரடங்கு காலத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது.

அதேபோல், 11 ஆம் வகுப்பில் 417 மாணவிகளுக்கும், 12 ஆம் வகுப்பில் 2 மாணவிகளுக்கும் என மொத்தம் 511 மாணவிகளுக்கு குழந்தை திருமணம் நடைபெற்றுள்ளது தெரியவந்துள்ளது. இந்த மாணவிகள் பள்ளிக்கல்வித்துறையின் நடவடிக்கையால் மீண்டும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு அவர்களின் கல்வி தொடர வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐதராபாத்,



## சொகுசு காருக்குள் கூட்டு வல்லுறவு

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத், ஜூப்லி ஹில்ஸ் பகுதியிலுள்ள ஒரு கேளிக்கை விடுதியில் கடந்த 28 ஆம் திகதியன்று மாலை 4 மணியளவில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு 17 வயது சிறுமி வீட்டுக்குத் திரும்பி கொண்டிருந்துள்ளார்.

விடுதியில் இருந்து வெளியே வந்த அந்த சிறுமியை வீட்டில் விட்டுவிடுவதாக கூறி சிறுவர்கள் உள்பட 6 பேர் சிவப்பு நிற 'பென்ஸ்' சொகுசு காரில் அழைத்து சென்றுள்ளனர். பேக்கரிக்கு அழைத்துச் சென்றவர்கள், அச்சிறுமியை இன்னோவா காருக்கு மாற்றி, மீண்டும் அழைத்துச் சென்று 6 பேரும் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். அதில், ஐந்துபேர் சிறுவர்கள் ஆவர்.

சிறுமி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தில் தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, அனைத்து இந்திய மஜ்லிக் இ இதிஹாத் உல் முஸ்லிமின் ஆகிய கட்சிகளை சேர்ந்த தலைவர்களின் மகன்களுக்கு தொடர்பு உள்ளதாக பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) குற்றச்சாட்டி உள்ளது.

புதுக்கோட்டை

## சூரியனாக மாறியது இரட்டை இலை

தமிழக முதல்வர் மு.கா ஸ்டாலின் வருகையை முன்னிட்டு, புதுக்கோட்டை நகரில், இரட்டை இலை வடிவிலான தெரு விளக்குகள் அகற்றப்பட்டு, சூரியன் போன்ற விளக்குகள் பொருத்தப்பட்டன. புதுக்கோட்டை நகரில், அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க.,) ஆட்சியில், இரட்டை இலை வடிவிலான தெருவிளக்குகள் பொருத்தப்பட்டன. தேர்தல்களின் போது, துணியால் மூடி, இரட்டை இலை வடிவ தெரு விளக்குகள் மறைக்கப்படுவது வழக்கம்.

தமிழகத்தில், திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க.,) ஆட்சி அமைந்து ஓராண்டுக்கு பின், முதல் முறையாக, தமிழக முதல்வர் ஸ்டாலின், புதுக்கோட்டைக்கு வருகிறார். இந்நிலையில், புதுக்கோட்டை நகராட்சி சார்பில் அமைக்கப்பட்ட இரட்டை இலை வடிவிலான தெருவிளக்குகள் அகற்றப்பட்டு, சூரியன் வடிவிலான தெரு விளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.







## துப்புரவு

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரின் பணிப்பின் பேரில், நகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வடிகாண்களை துப்பரவு செய்யும் நடவடிக்கை துரிதமாக இடம் பெற்று வருகின்றது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்



## தூய்மையாக்கல் நிகழ்வு





உலக சமுத்திர தினத்தை சிறப்பிக்கும் முகமாக கடல் வளங்களை பாதுகாக்கும் கருப்பொருளுக்கு அமைய மன்னார் தோட்டவெளி கடற்கரை பகுதியில் தூய்மைப் படுத்தும் நிகழ்வு நேற்று (08) இடம்பெற்றது.

எஸ்.றொசேரியன் லெம்பேட்





## சிரமதானம்



உலக சுற்றுச்சூழல் தினமான நேற்று (08), முல்லைத்தீவு சுற்றுலா கடற்கரையில் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கரித்தாஸ்,கியூடெக் அரச சாற்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட இந்த சுத்தம் செய்யும் நிகழ்வில் அருட் தந்தையர்கள் முல்லைத்தீவு,கிளிநொச்சியினை சேர்ந்த மக்கள்,முல்லைத்தீவு பொலிஸார் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

சண்முகம் தவசீலன்





## விதை வழங்கி வைப்பு



மன்னார் மாவட்ட செயலக அலுவலர்கள் நலன்புரி சங்கத்தால் நடத்தப்படும் வீட்டுத் தோட்ட செய்கை போட்டியில் கலந்து கொள்ளவதற்காக, பெயர் விபரத்தினை வழங்கியோருக்கு, வீட்டுத் தோட்ட செய்கை பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கும் விதை, நாற்றுக்கள் வழங்கும் நிகழ்வும் மாவட்டச் செயலகத்தில் நேற்று (08) நடைபெற்றது.

எஸ்.றொசேரியன் லெம்பேட்






## பொதிகள் வழங்கி வைப்பு




நாளாந்தம் கூலித் தொழில் செய்யும் பொருளாதார ரீதியில் கஷ்டப்படுகின்ற குடும்பங்களுக்கு ஆறாம் கட்டமாக அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் நேற்று முன்தினம் (07) வழங்கிவைக்கப்பட்டன.

வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையில், திருகோணமலை மக்கள் சேவை மன்ற தலைவர் எம் ரீ. எம். பாரிஸ் தலைமையில் திருகோணமலை சாம்பல்தீவு, இலுப்பைக்குளம், மாங்காயூற்று ஆகிய கிராமங்களில் உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன

ஹஸ்பர்

அமெரிக்கா

# தமிழில் பேசியதால் இலவச உணவு

அமெரிக்காவைச் சேர்ந்த ஸியோமா என்பவர் உணவுகளை ருசித்து, அதை 'யு டியூப்' வலைதளத்தில் பதிவேற்றி வருகிறார்.
இந்நிலையில் அவர் சமீபத்தில் நியூயோர்க்கில் உள்ள ஒரு இந்திய உணவகத்திற்குச் சென்று தமிழில் உணவுகளின் பெயரைக் குறிப்பிட்டு எடுத்து வரச் சொல்லியுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்கர் ஒருவர் தமிழில் பேசி உணவு கேட்டதால் நெகிழ்ச்சி அடைந்த



உணவக உரிமையாளர், ஸியோமாவுக்கு இலவசமாக உணவு வழங்கியுள்ளார்.

இந் நிகழ்வு யு டியூபில் பதிவேற்றப்பட்ட பின், 14 லட்சத்திற்கும் அதிகமானோர் அதை பார்வையிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த ஸியோமா " உலகின் மிகப் பழமையான மொழிகளில் தமிழும் ஒன்று என அறிந்தபோது, அம்மொழியை கற்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. இந்நிலையில், நியூயோர்க்கில் தமிழர்களால் நடத்தப்படும் உணவகங்களைத் தேட ஆரம்பித்தேன்.

அப்படி இந்த உணவகத்தில் நுழைந்து நான் தமிழில் பேசியதைக் கேட்டு உரிமையாளர் மகிழ்ச்சி அடைந்து இலவசமாக உணவு வழங்கினார்" எனத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

# 2024 இல் ஒரே சார்ஜர்



2024 ஆம் ஆண்டு முதல் ஐரோப்பா முழுவதும் ஒரே மாதிரியான கைத்தொலைபேசி சார்ஜர்களைப் பயன்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

அப்பிள் கைத்தொலைபேசிகள் மற்றும் அண்ட்ரொய்ட் தொலைபேசிகளுக்கு வெவ்வேறு சார்ஜர்கள் பயன்படுத்தப்படுவதால் வாடிக்கையாளர்கள் வெவ்வேறு சார்ஜர்களை வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் வெவ்வேறு சார்ஜர்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பண விரயத்தை போக்குவதற்காக ஐரோப்பா முழுவதும் அனைத்து கைத்தொலைபேசிகள், டப்ளட்கள், கெமராக்கள் ஆகியவற்றில் அண்டிரொய்ட் தொலைபேசிகளில் பயன்படுத்தப்படும் சி-டைப் சார்ஜர்களைப் பயன்படுத்த வேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதனால் அப்பிள் நிறுவனம் ஐ-போன்களின் சார்ஜர் மற்றும் கனெக்டர் பின்னை மாற்றி வடிவமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெக்சிகோ



# திறப்பு விழாவின்போது இடிந்து விழுந்த பாலம்

திறப்பு விழாவின்போது புதிதாகக் கட்டப்பட்ட நடைபாதை மேம்பாலமொன்று இடிந்து விழுந்த சம்பவம் மெக்சிகோவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிகோவின் மொரிலொஸ் மாகாணம் ஹர்வவசா நகரில் மரக்கட்டை மற்றும் இரும்பினால், புதிதாக நடைமேடை மேம்பாலமொன்று அமைக்கப்பட்டது.

இந்நிலையில் இப் புதிய பாலத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் (07) நடைபெற்றுள்ளது. இத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட அந்நகர மேயர்

> மேம்பாலம் இடிந்து விழுந்தமையால் மேயர் ஜோஸ் லுயிஸ் யுரியோசெட்யு உட்பட பலர் 10 அடி பள்ளத்தில் விழுந்தனர்


மற்றும் அவரது குடும்பத்தினர் உட்பட அப்பகுதி மக்கள் குறித்த பாலத்தில் நடந்து சென்றுள்ளனர்.

இதன்போது எதிர்பாராத விதமாக அப்பாலம் பாரம் தாங்க முடியாமல் இடிந்து விழுந்துள்ளது.

இதில், மேயர் ஜோஸ் லுயிஸ் யுரியோசெட்யு உட்பட பலர் 10 அடி பள்ளத்தில் விழுந்தனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியா



# ஜொனி டெப் விருந்து

முன்னாள் மனைவி ஆம்பர் ஹெர்ட்டிற்கு (Amber Heard) எதிரான வழக்கில் பெற்ற வெற்றி பெற்ற நடிகர் ஜானி டெப்( Johnny Depp), அதனைக் கொண்டாடும் வகையில் பிரித்தானியாவில் உள்ள பிரபல இந்திய உணவகத்தில் தனது நண்பர்களுக்கு விருந்து வைத்துள்ளார்.

பர்மிங்ஹாமில் உள்ள வாரணாசி என்ற அந்த உணவகத்தில், 21 நண்பர்களுடன் உணவருந்திய அவர், இதற்காக இலங்கை மதிப்பில் 2 கோடியே 21.58லட்ச ரூபாய் செலவழித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 3 மணி நேரத்திற்கு மேல் உணவகத்தில் செலவிட்டதுடன், அங்கு உணவு பரிமாறியவர்களுக்கு அவர் அதிக தொகையை அன்பளிப்பாக வழங்கியதாகவும் தகவல் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா

# இருளில் ஒளிரும் வீதிகள்

உலகெங்கிலும் வீதி விபத்துக்களினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அரசாங்கம், வாகன ஓட்டுநர்களுக்கு மட்டுமின்றி சைக்கிள் ஓட்டுபவர்களும், பாதசாரிகளும் கூட பாதுகாப்பாகப் பயணிக்கும் வண்ணம் தனது வீதிகளில் புதுமையான தொழில்நுட்பம் மூலம் புதுப்பித்து வருகிறது.

அந்தவகையில் இருட்டில் ஒளிரக் கூடிய வகையில் வீதிகளில் புதிய மாற்றமொன்றை கொண்டுவந்துள்ளது. அதாவது வீதியின் ஓரங்கள், அடையாள பலகைகள், சாலையின் குறுக்கே செல்லும் எல்லைக்கோடுகள் என அனைத்திலும் எல்.இ.டி



தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒளிரும் அமைப்புக்களை பதித்து வருகின்றது.

இதன் மூலம் வீதிகளில் உள்ள கோடுகள் பகலில் சாதாரணமாகத் தோன்றும், ஆனால் இரவில் அவை நட்சத்திரங்களைப் போலவே ஒளிரும். இதுபோன்ற வீதி பாதுகாப்புத் திட்டப் பணிகளுக்காக அவுஸ்திரேலிய அரசு 245 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# தந்தையைக் கொன்ற குழந்தை: தாய்க்குத் தண்டனை

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலிருக்கும் ஆர்லண்டோ நகரைச் சேர்ந்தவர் ரெக்கி மப்ரி, 26 வயதான இவர் 'வீடியோ கேம்' விளையாடிக் கொண்டிருந்தபோது, அவரின் இரண்டு வயது குழந்தை துப்பாக்கியால் சுட்டதில் உயிரிழந்தார்.

இவ் வழக்கில் துப்பாக்கியை பாதுகாப்பாக வைக்காமல் குழந்தையின் கைக்கு கிடைக்கும் வகையில் அலட்சியமாக நடந்து கொண்ட குற்றச்சாட்டில் ரெக்கி மப்ரியின் மனைவி, அயலா கைது செய்யப்பட்டார். அவர் மீது, 'கொலைக்குக் காரணமாக இருந்தமை, வீட்டில் போதை பொருள் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந்நிலையில் குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி, 'மூன்று குழந்தைகளின் தாயான அயலாவின் அஜாக்கிரதை தான் ஒரு உயிர் பறிபோகக் காரணம்' எனவே அவர் குற்றவாளி' என தெரிவித்தார்.

அத்துடன் மூன்று குழந்தைகளும் தாய், தந்தையின்றி வளர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதிலும் 3 ஆவது குழந்தை, தந்தையை கொன்று விட்டோம் என்ற குற்ற உணர்வில் வளர்வது வேதனை அளிப்பதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

ரெக்கி மப்ரி தம்பதியர் ஏற்கனவே குழந்தைகளிடம் அக்கறையின்றி இருந்தமை, போதை பொருள் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில்தண்டனை அனுபவித்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# இலங்கையை வீழ்த்திய அவுஸ்திரேலியா

இலங்கைக்கு எதிரான முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், தனுஷ்க குணதிலகவின் 26 (15) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்ற இலங்கை, அவரை ஜொஷ் ஹேசில்வூட்டிடம் பறிகொடுத்தது.

பின்னர் பதும் நிஸங்கவின் 36 (31), சரித் அஸலங்கவின் 38 (34) ஓட்டங்கள் மூலம் இனிங்ஸை நகர்த்திய இலங்கை, நிஸங்கவை மிற்செல் ஸ்டார்க்கிடம் இழந்ததைத் தொடர்ந்து, ஹேசில்வூட் வீசிய 14ஆவது ஓவரில் குசல் மென்டிஸ், பானுக ராஜபக்ஷ, அணித்தலைவர் தசுன் ஷானகவை இழந்து தடுமாறியது.

தொடர்ந்தும் ரன் அவுட் முறையில் அஸலங்கவும், சாமிக கருணாரத்னவும் விழ, துஷ்மந்த சமீரவும், 17 (15) ஓட்டங்களைப் பெற்ற வனிடு ஹஸரங்கவும் ஸ்டார்க்கிடம் வீழ்ந்ததோடு, மகேஷ் தீக்ஷனவும் கேன் றிச்சர்ட்ஸனிடம் விழ 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 128 ஓட்டங்களையே இலங்கை பெற்றது. பந்துவீச்சில், ஹேசில்வூட் 4-0-16-4, ஸ்டார்க் 4-0-26-3, றிச்சர்ட்ஸன் 3.3-0-22-1, அஸ்தன் அகர் 4-0-25-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 129 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, டேவிட் வோணரின் ஆட்டமிழக்காத 70 (44), பின்ஞ்சின் ஆட்டமிழக்காத 61 (40) ஓட்டங்களோடு 14 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், மகேஷ் தீக்ஷன 4-0-25-0, சாமிக கருணாரத்ன 2-0-13-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஜொஷ் ஹேசில்வூட் தெரிவானார்.

இந்தியா எதிர் தென்னாபிரிக்கா:

# இ 20 தொடர் இன்று ஆரம்பிக்கிறது




இந்தியா, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரானது டெல்லியில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

இவ்வாண்டின் பிற்பகுதியில் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் இத்தொடர் முக்கியமானதாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்) சிறப்பாகச் செயற்பட்டதன் மூலம் இந்திய அணியில் இடம்பிடித்த தினேஷ் கார்த்திக், அர்ஷ்டீப் சிங், உம்ரான் மலிக் ஆகியோர் தாம் அணியில் தொடர்ந்து நீடிப்பதற்கான அருமையான வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது.

தவிர, ருத்துராஜ் கைகவாட், இஷன் கிஷன் போன்றோருக்கும் தம்மை நிரூபிப்பதற்கான இறுதி வாய்ப்பாக இத்தொடர் காணப்படுகின்றது.

இதேவேளை, இந்திய அணியில் தனது திறமைகளை ஹர்டிக் பாண்டியா வெளிப்படுத்த வேண்டிய தொடராக இத்தொடர் காணப்படுகின்றது.

மறுபக்கமாக தென்னாபிரிக்காவைப் பொறுத்த வரையில் குயின்டன் டி கொக், தப்ரையாஸ் ஷம்சி, ககிஸோ றபாடா, றஸி வான் டர் டுஸன் உள்ளிட்டோருடன் இதுவரையில் தனது சிறந்த ஐ.பி. எல் பருவகாலத்தைக் கொண்டிருந்த டேவிட் மில்லர் குழாமிலிருப்பது பெரும்பலமாகக் காணப்படுகின்றது.



பட்டிருப்பு வலய மட்ட கிரிக்கெட் தொடரில்

# பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

பட்டிருப்பு வலய கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிக்குடி சம்பியனானது.

களுதாவனை பொது மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் செட்டிப்பாளையம் மகா வித்தியாலயத்தை வென்றே பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் சம்பியனானது.

அந்தவகையில், மாகாண மட்டத் தொடருக்கு பட்டிருப்பு மகா வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.




தேசங்களுக்கான லீக்:

# சமநிலையில் ஜேர்மனி இங்கிலாந்து போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், தமது நாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற இங்கிலாந்துடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி சமப்படுத்தியது.

ஜேர்மனி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொனாஸ் ஹொஃப்மன்னும், இங்கிலாந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹரி கேனும் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 09 ஜூன் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.